## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத் தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்டதரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது

கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் முழுமையாக தேய்விடப்பட்ட தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் ரூபா 24,730,308 கிரயமான சொத்துக்களில் ரூபா 11,176,630 கிரயமான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட ரூபா 11 மில்லியன் பெறுமதியான சொத்துக்களின் செயற்பாட்டு வருமானத்திற்கு ஈடுபடுத்தப்படாமையால் மீள்மதிப்பீடு செய்யப்படவில்லை என்பது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முழுமையாக தேய்விடப்பட்ட ரூபா 3,096,741 கிரயமான பொறிகள், உபகரணங்கள் ரூபா 965,000 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், இந்த மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களுக்குரிய 20 சதவீத படியான ரூபா 193,000 வருடாந்த பெறுமானத்தேய்வு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியின் அடிப்படையில் ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு நிறுவனத்தின் கணக்குப் பிரிவினால் தவறுதலாக கணிப்பிடப்படடாமை வெளிப்படுத்தப்பட்டமையால், அது 2023 ஆம் ஆண்டின் போது பேரேட்டு இலக்கம் 687 இன் கீழ் குறித்த தவறிவிடப்பட்ட பெறுமானத் தேய்வினை கடந்த வருடத்தின் பதிவொன்றாக திருத்தியுள்ளமை. | பெறுமானத்தேய்வு சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 13,553,678 கிரயமான சொத்துக்கள் ரூபா 9,077,000 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்காய்விற்கமைய மீள்மதிப்பீட்டு இலாபம் ரூபா 9,039,528 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றின் மீள்மதிப்பீட்டு இலாபமாக ரூபா 9,476,327 காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மீள்மதிப்பீட்டு இலாபம் ரூபா 436,800 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | மேலே உள்ள தேய்மானத்தைக் கணக்கிடுவதன் மூலம், மீள்மதிப்பீட்டு இலாபம் மிகைப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் மேலே உள்ள திருத்தத்தின் காரணமாக, மீள்மதிப்பீட்டு இலாபம் திருத்தப்பட்டுள்ளது. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு ஆவணத்திற்கமைய முழுமையாக தேய்விடப்பட்ட ரூபா 14,058,605 கிரமயான சொத்துக்கள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 9,077,000 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் பிரகாரம் அந்த சொத்துக்களின் கிரயம் ரூபா 13,553,679 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய பட்டோலை | கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பான விடயங்களை ஆராயும் போது நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் சரியானது என்பதை கணக்கியல் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளதுடன், மீள்மதிப்பீட்டு ஆவணத்தை திருத்துவதற்கு அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | நிதிக்கூற்றுக்களில் சரியான தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் நிதிக்கூற்று ஆகியவற்றுக்கிடையே ரூபா 504,926 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பரீட்சை மீதியில் மூலததனம் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட ஈட்டங்களின் ஆரம்ப மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 233,597,501 ஆக குறிப்பிடப்பட்ட போதிலும், நிதியங்களின் மாற்றங்கள் கூற்றில் அது ரூபா 235,156,680 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 1,559,179 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | கணக்குகளைத் தயாரிப்பதில், நிறுவனம் எக்செல் (நுஒஉநட) தாளைப் பயன்படுத்தியது மற்றும் கணக்குகளைப் பயன்படுத்துபவர்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் கணக்குகள் வழங்கப்பட்டதாக விளக்கப்பட்டது. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2009 இன் 38 ஆம் இலக்க தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவக அதிகாரச்சட்டம் | | | |
| | (i) 20(1) உப பிரிவின் பிரகாரம் அமைச்சரினால் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிறுவனத்தின் எதேனும் பணியொன்று அல்லது அவை அனைத்தையும் மேற்கொள்ளும் பணிக்காக மற்றும் சட்டத்தின் நியதிகளுக்கு அதிகாரமளிக்கும் பணிக்காக கட்டளைகளை உருவாக்க இயலுமான போதிலும், அந்த கட்டளைகள் | அமைச்சின் கட்டளைகளை தயாரிப்பதற்காக இந்த அதிகாரச்சட்டத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால் தற்போது நிறுவனத்தினால் தொழில் அமைச்சின் ஊடாக புதிய திருத்தங்களுடனான அமைச்சரவைப் பத்திமொன்று சமர்ப்பிக்கப்பட் | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | டு கௌரவ சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| | | (ii) | 11 ஆம் பிரிவிற்கமைய நிறுவனத்தின் செயற்திறனான நிர்வாகத்திற்கு தேவையான வகையில் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் எனும் ரீதியில் ஏதேனும் எண்ணிக்கையான நபர்கள் சபையினால் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பில் எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டு அது தொடர்பில் பணிப்பாளர் சபையின் பரிந்துரையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க குறித்துக்கொள்கின்றேன். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை | 10.2 ஆம் பந்தி மற்றும் வழிகாட்டி இலக்கம் 14 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை குறித்த சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கமைய தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | இது தொடர்பில் நிறுவனத்திடம் வினவிய போது, 2020 ஆம் ஆண்டு முதல் செயலாற்றல் 2022 ஆம் ஆண்டின் போது முன்வைக்கப்பட்ட விதம் (குழசஅயவ) பின்பற்றப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் உரிய சுற்றறிக்கை இலக்கத்தினை அல்லது அறிவுரை | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | வழங்கி எதிர்வரும் வருடத்தில் சரியான செயலாற்றலை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 48,116,618 ஆன மிகையாக இருந்ததுடன் அதனோடு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 25,122,253 தொகையாகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 22,994,365 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு செயற்பாட்டு வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்தமை ஆகியன பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 25 ஆக காணப்பட்டதுடன், உள்ளபடியாக பதவியணி 16 ஆகும், நிறுவனத்தின் பணிகளை மேற்கொள்ளும் போது கட்டளைச் சட்டங்கள் மூலம் சாட்டப்படும் பணிகளுக்காகவும் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் சாட்டப்படும் முகாமைத்துவ பணிகளை நிறைவேற்றுவதற்காகவும், அதனை நிறைவேற்றும் நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் பதவியான பணிப்பாளர் நாயகம் பதவி ஒப்பந்த அடிப்படையில் சேவை பெற்றுக்கொள்ளப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களில் இருந்து பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட விரும்புகின்றேன். | நிறுவனம் தனது பணியை நிறைவேற்ற இயலுமான வகையில் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய வேண்டும். |
| நிறுவனத்தின் நிலவுகையுடன் தொடர்புடைய முக்கிய பணிப்பொறுப்பு சாட்டப்பட்டுள்ள பணிப்பாளர் (சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு) பதவிக்காகவும் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரின் சேவை தேவையான போதிலும், தேவையான சந்தர்ப்பங்களில் வளவாளர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டவாறு காணப்பட்டது. | மேலும், கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பாளர் (சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு) பதவிக்கு, பணிப்பாளர் நாயகம் பதவியைப் போன்று ஒப்பந்த அடிப்படையில் எந்த சேவையும் பெறப்பட மாட்டாது என்பதை உறுதிப்படுத்துகிறேன். | |